செ.வெ.எண்.08 நாள்.03.04.2020

**பத்திரிக்கை செய்தி**

# கடலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் பொதுமக்களுக்கு வழங்கினார்.

------

கடலூர் சாவடியில் உள்ள நியாயவிலைக்கடையில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வெ.அன்புச்செல்வன்,இஆப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் பொதுமக்களுக்கு வழங்கினார்.

கடலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்காக 6,32,520 விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மாவட்டத்திலுள்ள ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் அனைத்து பகுதிகளிலும் அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலம் மாவட்டம் முழுவதும் வீடு வீடாக வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் இந்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களில் "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதன்படி **"விழித்திரு - விலகி இரு - வீட்டில் இரு"** வீட்டை விட்டு வெளியே வராமல் இருக்க வேண்டும். கொரோனா வைரஸ் வேகமாக பரவக்கூடிய ஒரு தொற்றுநோய், அத்தியாவசிய பொருட்களான மளிகைப்பொருட்கள், காய்கறிகள் ஆகியவை பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, முககவசம் அணியாமல் வெளியில் வரவேண்டாம், பொதுமக்கள் ஒருவருக்கும், மற்றொருவருக்கும் இடை மூன்றடி தூரம் இடைவெளி இருப்பதை உறுதி செய்ய வேண்டும் போன்ற வாசகங்கள் அடங்கப்பட்டுள்ளது.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர்.